[3rd August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்தத் தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தை அடியோடு ரத்து செய்யும் உத்தேசம் மத்திய சர்க்காருக்கு உண்டா? அதைப் பற்றி ராஜ்ய சர்க்காருக்குத் தகவல் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் இந்தத் தங்கக் கட்டுப்பாடு முறையை மாற்ற இருக்கிறார்கள். அவர்களுடைய முடிவு தெரிந்த பிறகுதான் எந்த அளவுக்கு மாற்றப் போகிறார்கள் என்று தெரிந்துகொள்ளலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : தங்கக் கட்டுப்பாடுச் சட்டத்தை மாற்றி அமைக்கும்போது லைஸென்ஸ் கேட்கிறவர்களுக்கு லைஸென்ஸ் கொடுத்து, 22 காரட்டில் நகைகள் செய்துகொள்ளலாம் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அதைப் பற்றி நம் அரசாங்கத்தை யோசனை கேட்டார்களா? நம் அரசாங்கம் என்ன யோசனை சொல்லியது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எந்த அளவுக்கு மாற்ற வேண்டுமென்று அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இறுதி முடிவு என்ன என்பது தெரியவில்லை.

திரு. சா. கணேசன் : சபாநாயகர் அவர்களே, பொற்கொல்லர்களுடைய எண்ணிக்கையும், தங்கக் கட்டுப்பாட்டினால் ஏற்பட்ட கஷ்டமும் தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, இதைத் தமிழக அரசும் நன்றாக உணர்ந்திருக்கிற காரணத்தினாலே, இந்தச் சட்டத்தில் எத்தகைய மாற்றம் வேண்டும், அல்லது முழுவதும் நீக்கப்படவேண்டும் என்பன போன்ற என்னென்ன ஆலோசனைகளை அல்லது கருத்துக்களை மத்திய அரசுக்கு மாநில அரசு தெரிவித்தது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சற்று முன்பு தான் விடை அளித்தேன். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்குப் பொற்கொல்லர்களுடைய கஷ்டங்களைத் தவிர்க்க, தவறுதல்களைத் தவிர்க்க எந்தெந்த வகையில் கட்டுப்பாட்டை மாற்றவேண்டும் என்று தெரிவித்திருக்கிறது. எத்தகைய மாற்றம் வேண்டுமென்று தெரிவித்திருக்கிறது என்பதைப்பற்றி தனிக்கேள்வி வேண்டும்.

நெல் வயல்கள் பருத்தி உற்பத்திக்கு மாற்றம்

***46 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி ஆகிய பிளாக்குகளிலுள்ள நெல் விளையும் 7,500 ஏக்கர்கள் பருத்தி உற்பத்திக்காக விவசாய இலாக்காவினரால் மாற்றப்பட்டிருக்கின்றனவா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

3rd August 1966]

கனம் திரு. பூ. கக்கன் (அ) & (இ) : இந்த வட்டாரங்களில் புதிதாக எந்தப் பகுதியிலும் நெல் வயல்களைப் பருத்தி விளைவுக்கு ஏற்ற முறையில் மாற்றவில்லை. ஆயினும், பிப்ரவரி-ஜூன் மாதங்களுக்கிடையில் கிணறுகளிலும், பாசன ஏரிகளிலும் உள்ள தண்ணீர் நெல் பயிரிடுவதற்குப் போதாமலிருக்கும்போது, நெல் பயிரிடப்படாத நிலங்களில் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, நெல் பயிரிடுவதற்குச் சாத்தியமான நிலங்கள்தான் பருத்தி பயிரிடுவதற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்று அங்கு உள்ளவர்கள் கூறுகிறார்கள். உணவுப் பஞ்ச காலத்தில் இந்த நடவடிக்கை அவசியம்தானா ?

கனம் திரு. பூ. கக்கன் : தண்ணீர் தாராளமாக இருந்தால் நெல் பயிரிடலாம், தண்ணீர் சொற்பமாக இருந்தால் பருத்தி பயிரிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளே முன் வருகிறார்கள். அரசாங்கம் யோசனை சொல்லியிருக்கிறது. விவசாயிகள் முன்வந்து செய்கிறார்கள்.

திரு. சா. கணேசன் : சபாநாயகர் அவர்களே, உணவு நெருக்கடி பெருகியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்திலே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்குமானால் அதை முழு ஏக்கர்களுக்கும் பாய விடாமல், எந்த அளவுக்குத் தண்ணீர் பாய்வது சாத்தியமாக இருக்குமோ அந்த அளவு ஏக்கர்களுக்குப் பாயவிட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதுதான் சரியான நெறியாக, முறையாக இருக்கும் என்று அரசாங்கம் ஒப்புக் கொள்ளக்கூடும். அதை விட்டு பருத்திக்கு ஆக்கம் கொடுக்கும் நிலைக்கு அரசாங்கம் ஏன் ஆலோசனை செய்யவேண்டுமென்று அறிய விரும்புகிறேன். பருத்தி அவசியமாக இருக்கலாம்; இல்லை என்று சொல்லவில்லை.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பருத்தி நமக்கு ரொம்பவும் பற்றாக்குறை. நூறு கவுன்ட், 80 கவுன்ட் நூல் வேண்டியிருக்கிறது. மக்கள் உயர்ந்த ரகத் துணிகளைத்தான் விரும்புகிறார்கள். இப்போது நாம் பருத்தியை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. விலை ஏறுகிறது. பருத்தியிலும் நாம் சுயநிறைவு காண வேண்டியிருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, சில இடங்களில் நெல் சாகுபடி செய்வதற்குப் பதிலாக பருத்தி, கரும்பு சாகுபடி செய்வதினால் நெல் உற்பத்தி குறைந்துவிட்டது என்று அரசாங்கம் சொன்னாலும் அல்லது வேறு யார் சொன்னாலும், நான் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. விலை ஏறியிருப்பதற்கும், பற்றாக்குறை இருப்பதற்கும் காரணம் அரசாங்கம் விநியோகம் செய்யக்கூடிய முறையில் உள்ள கோளாறு. நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தாசில்தார், சப்ளை ஆபீசர் ஆகியோர்களிடம் போய்த் திண்டாடுவதைவிட, பருத்தி உற்பத்தி செய்வது லாபகரமாக இருக்கிறது, தொந்தரவு குறைவாக இருக்கிறது. ஆகையால் அரசாங்கம் விவசாயிகளிடத்தில் தலையிடாமல் இருப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[3rd August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுகிற கருத்து கனம் அங்கத்தினர் அவர்களுடையது. இதை விவசாயிகள் ஒருகாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

MR. SPEAKER : Some other subject is discussed in this question.

திரு. சா. கணேசன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறபொழுது பருத்தி ஓரளவுக்குப் பற்றுக்குறையாக இருப்பதாகக் கூறினர்கள். ஓரளவுக்கு அது உண்மையாக இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பருத்தி பற்றுக்குறையாக இருப்பதைவிட, உணவுப் பற்றுக்குறை மிகக் கொடியது என்பதிஞல் உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமே அன்றி, பருத்திக்குக் கொடுக்கப்படாது. ஆதலினலே இதைக் கவனத்தில் கொண்டு, பருத்தி உற்பத்தி தடைப்பட்டாலும், உணவு உற்பத்திக்கு ஆக்கம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்ருேடு ஒன்று ஒப்பிடுவது முறையல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒப்பிடுவதாக இருந்தாலும், இரண்டு நாட்களுக்கு உணவு இல்லாமல் இருக்கலாம், ஆனல் ஒரு நாளேக்குக்கூட ஆடை இல்லாமல் இருக்கமுடியாது (சிரிப்பு).

Export of cotton seeds from Coimbatore

* 47 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that cotton seeds are exported from the State in particular, from Coimbatore area to outside regions, particularly Bombay for extraction of oil; and

(*b*) whether the Government are aware of the consequent rise in price of cotton seeds in the State?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1965-ம் ஆண்டில் கோயம்பத்தூர் மாவட்டத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்குப் பருத்திக் கொட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பம்பாய்க்கு ஏற்றுமதியான அளவைப் பற்றிய சரியான விவரங்கள் கிடைக்கவில்லே. பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காகவே பருத்தி விதைகள் வெளியிலுள்ள ஏஜன்டுகளால் வாங்கப்படுகின்றன.

(இ) தெரியும்.

திரு. வை. சங்கரன் : அப்படித் தெரியுமானல், இம்மாதிரி பருத்துக்கொட்டையை இங்கிருந்து வெளி மாகாணங்களுக்கு அனுப்புவதால், இங்குள்ள பருத்திக்கொட்டையின் விலே அதிகரித்துக்கொண்டு வருவதின் விளேவை மனத்தில்கொண்டு, வெளி ராஜ்யங்களுக்கு இதை அனுப்புவதை அனுமதிக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, அதற்குத் தடை விதிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?